சென்னை—கல்பாக்கம் பேருந்துப்பணி

* 632 வினா திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கல்பாக்கத்திற்கு நேரடி பேருந்து விடும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராம்ச்சந்திரன் : பல்லவன் போக்குவரத்துக் கழகம் கீழே குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் வெவ்வேறு மார்க்கமாக சென்னையிலிருந்து கல்பாக்கம் நகரியத்திற்கு பேருந்துகளை செலுத்தி வருகிறது.

(1)வழித்தடம் எண் 108 பிராட்வே (சென்னை)—கல்பாக்கம் நகரியம் (எட்டு பேருந்துகள்) வழி வெலிங்டன், சைதாப்பேட்டை, கிண்டி, தாம்பரம், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் மற்றும் சதுரங்கப்பட்டணம்.

(2) வழித்தடம் எண் 119 பிராட்வேயிலிருந்து (சென்னை) கல்பாக்கம் நகரியத்திற்கு (மூன்று பேருந்துகள்) வழி சைதாப்பேட்டை, அடையார், கேளம்பாக்கம், திருப்போரூர், மகாபலிபுரம் மற்றும் சதுரங்கப்பட்டணம்.

(3) வழித்தடம் எண் 119ஏ பிராட்வேயிலிருந்து (சென்னை) கல்பாக்கம் நகரியத்திற்கு (மூன்று பேருந்துகள்) வழி சைதாப்பேட்டை, திருவான்மியூர், முட்டுக்காடு, கோவளம், மகாபலிபுரம் மற்றும் சதுரங்கப் பட்டணம்.

பழனி கோயில்

*633 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பழனி தண்டபாணிசுவாமிக்கு வைர கிரீடம் சாத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பழனி அருள்திரு தண்டபாணி சுவாமிக்கு வைர கிரீடம் சாத்தும் திட்டம் அறங்காவலர் பரிசீலனையில் உள்ளது.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்த வைர கிரீடத்திற்கு கோயில் நிதியிலிருந்து செலவிட ஆலோசிக்கப்பட்டுள்ளதா? அல்லது பொதுமக்களிடமிருந்து வசூலிக்கிற நிதியிலிருந்து செலவிட ஆலோசிக்கப்பட்டுள்ளதா ?